தினத்தந்தி
3. 7. 2024

## நாகமங்கலம் ஊராட்சி அலுவலகத்தில்

# மரபுசாரா எரிசக்தி காற்றாலை மின் உற்பத்தி தொடக்கம்

மணிகண்டம், ஜூலை.3-

மணிகண்டம் ஒன்றியம், நாகமங்கலம் ஊராட்சி அலுவலகத்தில் மரபுசாரா எரிசக்தி காற்றாலை மின் உற்பத்தி தொடக்க நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு செயின்ட் ஜோசப் கல்லூரி அதிபர் பவுல்ராஜ் மைக்கில் தலைமை தாங்கி காற்றாலை மின் உற்பத்தியை தொடங்கி வைத்து பேசினார். நாகமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் வெள்ளைச்சாமி வரவேற்று பேசினார். செப்பர்டு இயக்குனர் சகாயராஜ் தொடக்கவுரையாற்றினார். முதுநிலை ஒருங்கிணைப்பாளர் ஜெயசந்திரன் உன்னத்பாரத் அபியான் பற்றி திட்ட விளக்கவுரையாற்றினார். முடிவில் ஒருங்கிணைப்பாளர் ஜெயசீலன் நன்றி கூறினார். இதில் ஊராட்சி செயலாளர் மூர்த்தி, ஊராட்சி பணியாளர்கள், விரிவாக்கத்துறையின் ஒருங்கிணைப்பாளர்கள் லெனின், யசோதை, ஜோசப் கிறிஸ்துராஜா. கல்லூரி மாணவர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.



தினமலர்
3.7.2024.

# நாகமங்கலத்தில் காற்றாலை மின் உற்பத்தி தொடக்கவிழா

**மணிகண்டம், ஜூலை 3–**

புதுடில்லி மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் 'உன்னத் பாரத் அபியான் 2.0' திட்டம் மூலம் திருச்சி ஜோசப் கல்லூரி செப்பர்டு விரிவாக்கத் துறை இணைந்து நாகமங்கலம் ஊராட்சி அலுவலகத்தில் மரபு சாரா எரிசக்தி காற்றாலை மின் உற்பத்தி தொடக்க விழா நேற்று நடந்தது.

ஜோசப் கல்வி நிறுவனங்களின் அதிபர் பவுல்ராஜ் மைக்கேல் தலைமை தாங்கி கற்றாலை மின் உற்பத்தியை தொடங்கி வைத்து ஊராட்சி அலுவலகத்திற்கு அர்ப்பணித்தார்.

செப்பர்டு விரிவாக்கத்துறை இயக்குநர் சகாயராஜ், முதுநிலை ஒருங்கிணைப்பாளர் ஜெயசந்திரன், பேராசிரியர் அலெக்சாண்டர், மணிகண்டம் ஒன்றிய சேர்மன் கமலம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். ஊராட்சி தலைவர் வெள்ளைச்சாமி வரவேற்றார். விரிவாக்கத் துறை ஒருங்கிணைப்பாளர் ஜெயசீலன் நன்றி கூறினார்.



நாகமங்கலம் ஊராட்சி அலுவலகத்தில் காற்றாலை மின் உற்பத்தி தொடக்க விழா நேற்று நடந்தது.

THE HINDU
4.7.2024.

# Nagamangalam panchayat office gets windmill

**The Hindu Bureau**
TIRUCHI

The Science and Humanities for People's Development (SHEPHERD) programme of St. Joseph's College in Tiruchi has installed a 1-KW mini windmill at Nagamangalam Panchayat Union office, that can power up to five lights and five fans in the building.

The windmill was established under the auspices of the Unnath Bharat Abhiyan (UBA) 2.0 programme of the Union Ministry of Human Resource Development, on Tuesday, by college Rector Pavulraj Michael in the presence of SHEPHERD director T. Sahayaraj and others..

The windmill was commissioned at a budget of ₹1.5 lakh. It was fabricated by a Bengaluru-based company and assembled locally by SHEPHERD's student volunteers.



A windmill commissioned by the SHEPHERD outreach programme of St. Josephs College being inaugurated at Nagamangalam Panchayat Union office.

The SHEPHERD team had earlier installed a small-scale windmill on the campus of a government school in Mathur, Manikandam Block in 2022.

தினமணி
4.07.2024.

# நாகமங்கலம் ஊராட்சி அலுவலகத்தில் காற்றாலை மின் உற்பத்தி தொடக்கம்

**திருச்சி, ஜூலை 3:** திருச்சி மணிகண்டம் ஒன்றியம், நாகமங்கலம் ஊராட்சி அலுவலகத்தில் காற்றாலை மின் உற்பத்தி தொடக்க விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

திருச்சி புனித ஜோசப் கல்வி நிறுவனங்களின் அதிபர் பவுல்ராஜ் மைக்கில் தலைமை வகித்து, காற்றாலை மின் உற்பத்தியைத் தொடங்கி வைத்து, நாகமங்கலம் ஊராட்சி அலுவலகத்துக்கு அர்ப்பணித்தார். செப்பர்டு விரிவாக்கத் துறையின் இயக்குநர் சகாயராஜ் தொடக்கவுரையாற்றினார். முதுநிலை ஒருங்கிணைப்பாளர் ஜெயசந்திரன் உன்னத் பாரத் அபியான் திட்டம் குறித்து விளக்கவுரையாற்றினார். இயற்பியல் பேராசிரியர் அலெக்சாண்டர் காற்றாலை குறித்த செயல்விளக்கம் அளித்தார். மேலும் அவர் எழுதிய காற்றாலையின் ஆற்றல் தொடக்கம் என்கிற நூல் வெளியிடப்பட்டது

இந்த விழாவில் மணிகண்டம் ஒன்றிய குழுத் தலைவர் கமலம் கருப்பையா, கல்லூரி கணினி அறிவியல் துறைத் தலைவர் ஆரோக்கியம் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். விரிவாக்கத் துறையின் முதுநிலை ஒருங்கிணைப்பாளர் லெனின் இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். கல்லூரிப் பணியாளர்கள் யசோதை, ஜோசப் கிறிஸ்து ராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். நாகமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் த. வெள்ளைசாமி வரவேற்றார்.

கல்லூரி விரிவாக்கத்துறையின் ஒருங்கிணைப்பாளர் ஜெயசீலன் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சிக்கு முன்னதாக இயற்கை சூழ்நிலையை உருவாக்கும் வண்ணம் ஊராட்சி மன்ற வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. நிகழ்ச்சி ஏற்பாடுகளை மத்திய கல்வி அமைச்சகத்தின் உன்னத் பாரத் அபியான் திட்டத்தின் கீழ், ஜோசப் கல்லூரியின் செப்பர்டு விரிவாக்கத் துறை செய்திருந்தது.

மாலை முரசு.
2.7.2024.



திருச்சி நாகமங்கலம் ஊராட்சி அலுவலகத்தில்

# மரபுசாரா எரிசக்தி காற்றாலை மின் உற்பத்தி தொடக்கவிழா

## மணிகண்டம் ஒன்றிய குழு தலைவர் கமலம் கருப்பையா பங்கேற்பு

திருச்சி, ஜூலை. 2

செயின்ட் ஜோசப் கல்லூரியின் செப்பர்டு விரிவாக்கத்துறை செப்பர்டு , புது டெல்லி மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் உன்னத் பாரத் அபியான் 2.0 திட்டத்தின் வாயிலாக மரபு சாரா எரி சக்தி காற்றாலை மின் உற்பத்தி தொடக்க விழா திருச்சி மணிகண்டம் ஒன்றியம் நாகமங்கலம் ஊராட்சி அலுவலகத்தில் இன்று நடைபெற்றது.

கிராமப்புற மக்களின் மேம்பாட்டிற்காகவும் உலகம் முழுவதும் அதிக எரி பொருள் பயன்பாட்டின் வழியாக கரிய அமில வாயு அளவு அதிகரிக்கிறது. இதனால் உலக வெப்பமயமாகுதலால் பாதிப்புக்குள்ளாகிறது. அதனை குறைப்பதற்கும் கிராமப்புற பள்ளி மாணாக்கர்களின் அறிவியல்திறன்களை மேம்படுத்தி கொள்ளவும் சிறிய அளவில் காற்றாலை மின் உற்பத்தி அலகு நிறுவப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில்செயின்ட் ஜோசப் கல்வி நிறுவனங்களின் அதிபர் பவுல்ராஜ் மைக்கிள் தலைமை தாங்கி, காற்றாலைமின்உற்பத்தியைதொடங்கி வைத்து, அதை நாகமங்கல ஊராட்சி அலுவலகத்திற்கு அர்ப்பணித்தார். செப்பர்டு விரிவாக்த்துறையின் இயக்குநர்சகாயராஜ் தொடக்கவுரையாற்றினார் .

முது நிலை ஒருங்கிணைப்பாளர் ஜெயசந்திரன் உன்னத் பாரத் அபியான் திட்டம் குறித்து விளக்கவுரை யாற்றினார். இயற்பியல் பேராசிரியர் அலெக்சாண்டர் காற்றா லை பற்றி செயல் விளக்கம் அளித்தார். மேலும் அவர் எழுதிய காற்றாலையின் ஆற்றல் தொடக்கம் என்றகிற நூல் இந்நிகழ்ச்சியில் வெளியீடப்பட்டது

இந்த விழாவில் மணிகண்டம் ஒன்றிய குழுதலைவர் கமலம்கருப்பையா, கணினி அறிவியல் துறைத் தலைவர் ஆரோக்கியம் ஆகியோர் வாழ்துரை வழங்கினார்கள். நாகமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் த வெள்ளைசாமி வரவேற்றார். முடிவில் விரிவாக்கத்துறையின் ஒருங்கிணைப்பாளர் ஜெயசீலன் நன்றி கூறினார்; விரிவாக்கத்துறையின் முது நிலை ஒருங்கிணைப்பாளர் லெனின் இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். விழாவில் யசோதை , ஜோசப் கிறிஸ்து ராஜா, ஊர்தலைவர்கள், கல்லூரி மாணவர்கள் மகளிர் குழு மற்றும் இளைஞர்கள் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள் .

இந்நிகழ்ச்சிக்கு முன்னதாக இயற்கை சூழ்நிலையை உருவாக்கும் வண்ணம் ஊராட்சி மன்ற வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும் இதற்கு முன்பு இனாம் மாத்தூர் அரசு பள்ளியில் காற்றாலை நிறுவப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தினகரன்
3.7.24.

## நாகமங்கலம் ஊராட்சியில்

# காற்றாலை மின் உற்பத்தி தொடக்கம்




திருச்சி, ஜூலை 3: திருச்சி புனிதவளனார்கல்லூரியின் செப்பர்டுவிரிவாக்கத்துறை மற்றும்டெல்லிமத்தியகல்வி அமைச்சகத்தின் கீழ் இயங் கும்உன்னத்பாரத்அபியான் 2.0 திட்டத்தின் வாயிலாக மரபு சாரா எரிசக்தி காற் றாலை மின் உற்பத்திக்கான தொடக்கவிழாநாகமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவல கத்தில் நடைபெற்றது.

கிராமப்புற மக்களின் மேம்பாட்டிற்காகவும் உல கம் முழுவதும் அதிக எரி பொருள் பயன்பாட்டின் வழியாக கரிய அமில வாயு அளவு அதிகரிக்கிறது. இத னால் உலக வெப்பமயமா குதலால்பாதிப்புக்குள்ளாகி றது.அதனைகுறைப்பதற்கும் கிராமப்புறபள்ளிமாணவர் களின்அறிவியல்திறன்களை மேம்படுத்தி கொள்ளவும் சிறிய அளவில் காற்றாலை மின் உற்பத்தி அலகு நிறுவப் பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் புனித வளனார் கல்வி நிறுவ னங்களின் அதிபர் முனை வர் பவுல்ராஜ் மைக்கிள் தலைமை தாங்கி, கற்றாலை மின்உற்பத்தியைதொடங்கி வைத்து அதை நாகமங்கலம் ஊராட்சி அலுவலகத்திற்கு அர்ப்பணித்தார். செப்பர்டு விரிவாக்கத்துறையின்இயக் குநர் முனைவர் சகாயராஜ் தொடக்கஉரையாற்றினார். முதுநிலைஒருங்கிணைப்பா ளர் ஜெயசந்திரன் உன்னத் பாரத்அபியான்பற்றிதிட்ட விளக்கவுரையாற்றினார். இயற்பியல் பேராசிரியர் முனைவர்அலெக்சாண்டர் செயல்விளக்கம்அளித்தார்.

மணிகண்டம் ஒன்றிய தலைவர்கமலம்கருப்பையா மற்றும் கணினி அறிவியல் துறைத் தலைவர் முனைவர் ஆரோக்கியம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நாகமங்கலம்ஊராட்சிமன்ற தலைவர் வெள்ளைசாமி வந்தவர்களை வரவேற்றார். முடிவில் விரிவாக்கத்துறை யின் ஒருங்கிணைப்பாளர் ஜெயசீலன் நன்றி கூறினார். விரிவாக்கத்துறையின் முது நிலை ஒருங்கிணைப்பா ளர் லெனின் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஊர்தலை வர்கள், கல்லூரி மாணவர் கள், மகளிர் குழு மற்றும் இளைஞர்கள், குழு உறுப்பி னர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னதாக இயற்கை சூழ்நிலையை உரு வாக்கும்வண்ணம்ஊராட்சி மன்ற வளாகத்தில் மரக்கன் றுகள் நடப்பட்டன. மேலும் இதற்கு முன்பு இனாம் மாத் தூர் அரசு பள்ளியில் காற் றாலைநிறுவப்பட்டதுகுறிப் பிடத்தக்கது.